(3) ஊராட்சி ஒன்றியங்களில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டுறவு வங்கி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி " அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல்வாழ்வுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் தோறும் ' அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவு வங்கி ' என்ற அமைப்பை அரசின் பங்கு மூலதனத்துடன் உருவாக்கி, ஊழியர்கள் வாழ்வில் மேற்படி வங்கி உற்ற தோழனாக இயங்கத்தக்க ஏற்பாட்டினை அரசு செய்ய வேண்டுமென இந்த மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது " என்கிற பொருள்பற்றி தனி உறுப்பினர் தீர்மானம் கொடுத்திருந்தார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவையில் இல்லாததால் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(4) மேலவைத் தேர்தலில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தனி உறுப்பினர் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" மேலவைத் தேர்தலில் ஆசிரியர் தொகுதியில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அரசியல் சட்டத்திலுள்ள " Not lower in standard than that of the Secondary Schools " என்ற வாக்கியத்தை நீக்கம் செய்ய வேண்டி மத்திய அரசுக்கு வலியுறுத்த இந்த அவை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்கிறது ".

செல்வி ஏ. லீலாவதி : இதை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

" மேலவைத் தேர்தலில் ஆசிரியர் தொகுதியில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அரசியல் சட்டத்திலுள்ள " Not lower in standard than that of the Secondary Schools " என்ற வாக்கியத்தை நீக்கம் செய்ய வேண்டி மத்திய அரசுக்கு வலியுறுத்த இந்த அவை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்கிறது ".

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, நான் முன்மொழிந்திருக்கிற இந்தத் தனி உறுப்பினர் தீர்மானத்தின் மீது என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த முன்வருகிறேன். இன்றையதினம் ஆசிரியர்களுடைய புள்ளிவிவரத்தை, கணக்கை எடுத்துக்கொண்டால், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தான் மிக அதிகமாக இருக்கிறார்கள். ஆசிரியர் தொகுதி என்ற ஒரு தொகுதி நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது. ஆறு உறுப்பினர்கள் அந்த வகையில்